2. அறிவிப்புகள் தொடர்ச்சி.

(உ) அவையினர் குழுவிற்குத் தேர்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒற்றை மாற்று வாக்கு முறைப்படி தேர்தல் நடத்துவதற்கு பேரவைத் தலைவர் வகுத்துள்ள விதிமுறைகளின் கீழ், அவையினர் குழுவிற்கு (House Committee) உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதற்கு வேட்பாளர்கள் நியமனத் தாள்களை 30-3-1971- செவ்வாய்க் கிழமை முற்பகல் 11 மணிக்குள் செயலாளரிடம் சேர்ப்பிக்க வேண்டும். நியமனத்தாள் வேண்டுவோர் செயலாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

நியமனத்தாள்கள் 30-3-1971 செவ்வாய்க்கிழமை மாலை 3 மணிக்கு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும். விலகிக்கொள்ள விரும்பும் வேட்பாளர்கள் 2-4-1971, வெள்ளிக்கிழமை காலை 11 மணிக்குள் விலகிக்கொள்ளலாம்.

நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை நிரப்பப்பட வேண்டிய வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு, அதாவது பதின்மூன்றுக்கு மேற்படுமாயின் 3-4-1971 சனிக்கிழமை காலை 9 மணிக்கும் பிற்பகல் 1 மணிக்கும் இடையே உறுப்பினர்கள் ஓய்வறையில் வாக்கெடுப்பு நடைபெறும்.

5. அரசினர் தீர்மானங்கள்—தொடர்ச்சி.

(இ) அரசினர் நூல்நிலையக் குழுவிற்குத் தேர்தல்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : பேரவைத் தலைவர் அவர்களே, "1950-ம் ஆண்டு தமிழ்நாடு பொது நூல்நிலைய விதிகளின் 2(1)(   )-வது விதியையொட்டி, மாண்புமிகு பேரவைத் தலைவர் குறிப்பிடும் நாளன்று, இப்பேரவை 1948-ம் ஆண்டு தமிழ்நாடு பொது நூல்நிலையச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 24/1948) 2-வது பிரிவின் கீழ் அமைக்கப்பட்ட அரசினர் நூல்நிலையக் குழுவிற்கு ஓர் உறுப்பினரைத் தேர்ந்தெடுக்கும்"
என்கிற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டது.

2. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(ஊ) அரசினர் நூல்நிலையக் குழுவிற்குத் தேர்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு கல்வி, வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானத்திற்கிணங்க, அரசினர் நூல்நிலையக் குழுவிற்குத் தேர்ந்தெடுப்பதற்கான வேட்பாளர்கள் நியமனத் தாள்களை 30—3—1971 செவ்வாய்க்கிழமை காலை 11 மணிக்குள் செயலாளரிடம் சேர்ப்பிக்க வேண்டும். நியமனத் தாள்கள் வேண்டுவோர் செயலாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.